*மாகாணக்கல்வித் திணைக்களம்*

*வடக்கு மாகாணம்*

**நிலையறி பரீட்சை- 2021**

**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

தரம் 10 | பகுதி 1, 11 | மூன்று மணித்தியாலயம் 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**கவனிக்குக**

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **இலக்கம் 01 தொடக்கம் 40 வரையான வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

**பின்வரும் விடய ஆய்விலிருந்து வினா இலக்கம் 01 – 03 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**

கிராமப்புறத்தில் வசிக்கும் சாருகா என்பவர் சிறந்த தையற்கலை நிபுணராகக் காணப்பட்டதனால், பொழுதுபோக்காக அப்பிரதேசத்தில் ஆடைகளை தயாரித்து விற்பனை செய்வதுடன்,covid 19 இனால் முகக்கவசங்களுக்கான கேள்வி அதிகரித்தமையால் நகர்ப்புறக் கடைகளுக்கும் முகக்கவசங்களைக் கொண்டுசென்று விற்பனை செய்து இலாபத்தை பெற்றார்.

01. மேற்படி சம்பவத்தால் இனங்காட்டப்படும் மனிதத் தேவையாக இனங்காணப்படுவது,
    1) உணவு 2) உடை 3) உறையுள் 4) பாதுகாப்பு

02. மேலுள்ள சம்பவம் தொடர்பாக பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
    1) சாருகா பொருள் உற்பத்தி வணிகத்தில் ஈடுபடுகின்றார்.
    2) இவ் வணிகம் பல்வேறு விருப்பங்களை உருவாக்குகின்றது.
    3) இவ் வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினராக பிரதேச மக்கள் காணப்படுகின்றனர்.
    4) இவ் வணிகம் தனியார் துறையைச் சார்ந்த பங்குடமை வணிகமாகும்.

03. இவ் வணிகத்திற்கு பயன்படுத்தும் தையல் இயந்திரம் எவ்வகை உற்பத்திக் காரணிக்குரியதாகும்.
    1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம் 4) முயற்சி

04. வணிகமொன்றில் அக்கறை செலுத்தும் தரப்பினர்கள் மூலம் வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புகள் சில தரப்பட்டுள்ளன.

    A– வழங்கப்பட்ட பொறுப்புக்களை சரியான முறையில் நிறைவேற்றல்

    B– தேவையான அளவு மூலதனப் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல்

    C- உரிய நேரத்தில் மூலப்பொருட்களை வழங்குதல்

    D–வணித்திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்தல்.

    மேற்கூறப்பட்டவற்றில் உரிமையாளர், வழங்குனர்களிடம் எதிர்பார்க்கும் பங்களிப்புகள் முறையே,
    1) A, D 2) B, D 3) A, B 4) B, C



kalvi.lk

05. வணிகச்சூழல் காரணிகள் சில கீழே தரப்படுகின்றன.

A– போட்டியாளர்

B –உரிமையாளர்

C –சட்டச்சூழல்

D- வாடிக்கையாளர்

E– முகாமையாளர்

F– ஊழியர்கள்

மேற்கூறப்பட்டவற்றுள் அகச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதி.

1) BDE 2) ACD 3) DEF 4) BEF

06. பின்வருவனவற்றுள் உள்நாட்டு வணிகத்தில் ஏற்படும் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகளாவன,

1) பயிற்சிபெற்ற ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லக்கூடிய நிலை ஏற்படுதல்.
2) உள்நாட்டுக் கலாசாரத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்படுதல்.
3) நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்ளமுடிதல்.
4) அதிக போட்டித்தன்மைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுதல்.

07. பின்வருவனவற்றில் வணிகமொன்றின் அச்சுறுத்தலாக அமைவது.

1) புதிய உற்பத்தி முறைகளை அறிமுகப்படுத்துதல்.
2) வணிகத்தின் பொருத்தமற்ற புவியியல் இடஅமைவு.
3) சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதித்தல்
4) அரசு மூலம் குறைவான வட்டி வீதத்தில் கடன்முறைகளை அறிமுகப்படுத்துதல்.

08. அரசினால் மூலதனமிட்டு அரசுக்கு உடைமையாகவுள்ள வணிக அமைப்பானது,

1) தனியார் துறை 2) பொதுத்துறை
3) இலாபநோக்குள்ள வணிகம் 4) இலாபநோக்கற்ற வணிகம்

09. பின்வருவன வணிக அமைப்புக்களது பண்புகளாகும்.

A– இலாபம் அல்லது நட்டம் உரிமையாளரே அனுபவித்தல்

B –நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

C –சட்ட ஆளுமையின்மை

D–தொடர்ந்தியங்கும் தன்மை கொண்டது.

கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்றின் பண்பாகக் கொள்ளப்படுவது.

1) A, C 2) A, B 3) B, D 4) A, D

10. வணிகமொன்றைப் பதிவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலமாக அமைவது.

1) ஏனைய வணிகத்துடன் ஒப்பிடமுடியாது.
2) அரச ஊக்குவிப்புக்களைப் பெறமுடியும்.
3) வணிகப் பெயரின் உரிமையை உறுதிப்படுத்த முடியாது.
4) கடன்கள் பெறமுடியாது.



kalvi.lk

11. பங்குடமை வணிகத்தை பதிவு செய்யும் சட்டமாக அமைவது.

1) 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச்சட்டம்

2) 1918ம் ஆண்டு 6ம் இலக்க வணிகப் பெயர் பதிவுக் கட்டளைச் சட்டம்

3) 1972ம் ஆண்டு 5ம் இலக்க கூட்டுறைவுச் சட்டம்

4) 2003ம் ஆண்டு 9ம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்.

12. இலாபநோக்குடைய தனியார் துறை நிறுவனமாவது.

1) கூட்டுறவு 2) திணைக்களம் 3) அரச கூட்டுத்தாபனம் 4) பங்குடமை

13. மனித தேவை விருப்பங்களை நிறைவுசெய்யக்கூடிய தொட்டுணரமுடியாத, பௌதீகத்தன்மை அற்றவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

1) சேவை உற்பத்தி நிறுவனம் 2) பொருள் உற்பத்தி நிறுவனம்

3) சந்தைப்படுத்தல் நிறுவனம் 4) காப்புறுதி நிறுவனம்

14. பின்வருவனவற்றில் உடல் உழைப்பை வழங்குவோர்.

1) கணக்காளர் 2) முகாமையாளர் 3) சுத்திகரிப்புத் தொழிலாளி 4) வைத்தியர்

15. உற்பத்திக்குத் தேவையான உற்பத்திக் காரணிகளை ஒழுங்கமைத்து யாதேனும் உற்பத்திச் செயன்முறையொன்றை ஆரம்பித்து நடாத்திச்செல்லும் கருமம் எது?

1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம் 4) முயற்சி

16. நாடொன்றின் பொருளாதார விருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுக்கும் நிறுவனம்

1) வணிக வங்கி 2) காப்புறுதி நிறுவனம் 3) அரசாங்கம் 4) நிதி நிறுவனங்கள்

17. கணக்கீட்டின் பிரதான நோக்கத்தைக்குறிப்பிடப் பொருத்தமான கூற்று.

1) வணிகத்தின் நிதிநிலைமை திருப்திகரமாக காணப்படுகின்றதா? என்பதை அறிய

2) வணிகம் போதுமான அளவு இலாபம் பெற்றுக்கொள்கின்றதா என்பதை அறிய

3) வணிகம் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கு தகவல்களை வழங்குவதற்கு

4) சட்டத்தேவைப்பாடுகளை நிறைவேற்ற.

18. பின்வரும் கொடுக்கல் வாங்கலில் வணிகத்தின் கணக்குகளில் பதிவு செய்யப்படமுடியாதது.

1) வங்கிக்கடனாக ரூபா 100000 பெறுதல்

2) வணிகத்தில் 50 ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

3) ரூபா 2000 மின்சாரக் கொடுப்பனவு

4) ரூபா 5000 க்கு கடன் விற்பனை

19. சொத்தொன்றின் பண்பாக அமைவது,

1) கடந்தகால கொடுக்கல்வாங்கலொன்றின் விளைவாக ஏற்படுதல்

2) நிகழ்காலக் கடப்பாடு கொண்டதாக இருத்தல்

3) எதிர்காலத்தில் வணிகத்திற்குப் பொருளாதார நலன்களை உட்பாய்ச்சப்படுதல்

4) தீர்ப்பனவின் போது வளங்களில் ஒருபகுதி வெளிச்செல்லல்



kalvi.lk

20. வணிகமொன்றின் 2020ம் ஆண்டுக்கான சொத்துக்கள் ரூபா 180000 ஆகவும் பொறுப்புக்கள் ரூபா 120000 ஆகவும் உள்ளபோது உரிமையாண்மைத் தொகை யாது?
1) ரூபா 300000 2) ரூபா 60000 3) ரூபா 180000 4) ரூபா 120000

21. பின்வருவனவற்றில் உரிமையாண்மை அதிகரிப்பதில் தாக்கம் ஏற்படுத்துவது,
1) உரிமையாளரால் சொந்தத் தேவைக்காக ரூபா 10000 காசு எடுத்தல்
2) 10% கழிவுடன் கடன்பட்டோரிடம் ரூபா 15000 பெறப்படுதல்
3) ரூபா 10000 உரிமையாளரால் மேலதிக மூலதனமிடல்
4) மின்சாரக் கொடுப்பனவாக ரூபா 6000 செலுத்தப்படுதல்.

**பின்வரும் சம்பவத்தைக் கொண்டு 22, 23ம் வினாக்களுக்கு விடை தருக.**
சாத்ராக் வணிகமானது ரூபா 10000 கிரயமான பொருட்களை கடனுக்கு விற்பனை செய்தது. விற்பனையின் போது 5% வியாபாரக் கழிவு வழங்கப்பட்டது. பின்னர் கடன்பட்டோரிடம் 10% கழிவுடன் பணத்தைப் பெற்றுக்கொண்டது.

22. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை சாத்ராக் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டின் கீழ் பதிவு செய்யும் போது **சொத்துக்களின்** மீது ஏற்படக்கூடிய தேறிய தாக்கம்.
1) ரூபா 950 ஆல் குறையும் 2) ரூபா 950 ஆல் அதிகரிக்கும்
3) ரூபா 9500 ஆல் குறையும் 4) ரூபா 8550 ஆல் அதிகரிக்கும்

23. சாத்ராக் வணிகத்தின் கடன்பட்டோரிடம் காசுப் பெறுவனவு தொடர்பிலான சரியான இரட்டைப்பதிவு யாது?
1) கடன்பட்டோர் கணக்கு வரவு 9500, காசுக் கணக்கு செலவு 9500
2) கடன்பட்டோர்கணக்கு வரவு 9500, காசுக்கணக்கு செலவு 8550, பெற்றகழிவுக்கணக்கு செலவு 950
3) காசுக்கணக்கு வரவு 9500, கடன்பட்டோர் கணக்கு செலவு 9500
4) காசுக்கணக்கு வரவு8550, கடன்பட்டோர்கணக்கு செலவு9500,கொடுத்தகழிவுக்கணக்கு செலவு 950

24. வரவு அதிகரிப்பு, செலவு குறைவு எனும் இரட்டைப்பதிவுத் தத்துவத்தை எடுத்துக்காட்டும் கணக்கு.
1) தளபாடக்கணக்கு 2) விற்பனைக் கணக்கு
3) பெற்றவாடகைக்கணக்கு 4) மூலதனக் கணக்கு

25. 15.06.2021 இல் சாயி ரூபா 50000 பெறுமதியான இயந்திரத்தை வணிகப் பயன்பாட்டிற்காக கடனுக்கு கொள்வனவு செய்ததுடன் ரூபா 10000 பெறுமதியான பண்டங்களை உடன் காசுக்கு விற்பனை செய்தார். இக் கொடுக்கல் வாங்கல் பதிவு செய்வதற்கான மூல ஏடுகள் முறையே,
1) விற்பனை நாளேடு, காசேடு 2) பொது நாட்குறிப்பேடு,காசுக் கணக்கு
3) கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு 4) கொள்வனவு நாளேடு, காசுக் கணக்கு

26. வணிகமொன்றின் பேரேட்டில் கொள்வனவுக் கணக்கானது ………(1)……….. கணக்காகக் காணப்படும் அதேவேளை கடன்கொடுத்தோர் கணக்கானது ………(2)………. கணக்காகக் காணப்படும்.
மேலே தரப்பட்ட கூற்றில் (1), (2) ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
1) செலவினம், உரிமை 2) பொறுப்பு, சொத்து
3) செலவினம், பொறுப்பு 4) வருமானம், உரிமை



kalvi.lk

27. கீழே A நிரலில் கணக்குகளின் வகைகளும் B நிரலில் சில பேரேட்டுக் கணக்குகளும் தரப்பட்டுள்ளன.

| A | B |
|---|---|
| 1. பொறுப்பு கணக்கு | P– காப்புறுதிக் கணக்கு |
| 2. உரிமைக் கணக்கு | Q– கடன்பட்டோர் கணக்கு |
| 3. செலவுக் கணக்கு | R– கடன்கொடுத்தோர் கணக்கு |
| 4. சொத்துக் கணக்கு | S– பற்றுக்கணக்கு |

மேலே தரப்பட்டுள்ள A நிரலிலுள்ள கணக்குகளின் வகைகளுடன் B நிரலிலுள்ள பேரேட்டுக் கணக்குகள் பொருந்துமாறு சரியான ஒழுங்குமுறையில் காணப்படும் விடை.

1) QRSP 2) RSPQ 3) PQRS 4) SPQR

28. இரட்டை விளைவு விதியை சரியாகக் காட்டாத கூற்று.

1) சொத்துகுறைவு செலவு, அதிகரிப்பு வரவு 2) பொறுப்பு, உரிமை, வருமானம் அதிகரிப்பு செலவு

3) சொத்துஅதிகரிப்பு செலவு, குறைவு வரவு 4) பொறுப்பு, உரிமை, வருமானம் குறைவு வரவு

29. தொலைபேசிச் செலவுக் கொடுப்பனவு ரூபா 2000 க்கான சரியான இரட்டைப்பதிவு.

1) காசுக் கணக்கு வரவு, தொலைபேசிக் கணக்கு செலவு

2) தொலைபேசிக் கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு

3) தொலைபேசிக் கணக்கு வரவு, அட்டுறு தொலைபேசிக் கணக்கு செலவு

4) அட்டுறு தொலைபேசிக் கணக்கு வரவு, தொலைபேசிக் கணக்கு செலவு

30. எழுதுபொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் "நிசா புத்தகசாலை" வணிகமானது தனது பாவனைக்காக ஒன்று ரூபா 1500 வீதம் 3 கதிரைகளை கொள்வனவு செய்தது.இக் கொடுக்கல் வாங்கலுக்குரிய மூல ஆவணங்கள், மூலஏடுகள் முறையே,

1) கொள்வனவுப் பட்டியல் - கொள்வனவு நாளேடு

2) விற்பனைப் பட்டியல் - விற்பனை நாளேடு

3) பொதுநாட்குறிப்புக் கச்சாத்து - பொதுநாட்குறிப்பேடு

4) கொடுப்பனவுக் கச்சாத்து - காசுக் கணக்கு

31. கடன்பட்டோரிடமிருந்து ஒப்பந்தக் காலத்திற்கமைய பெறவேண்டிய தொகையிலிருந்து குறைத்து விடப்படும் தொகையானது ஒரு,

1) காசுக்கழிவு 2) பெற்றகழிவு 3) வியாபாரக் கழிவு 4) கொடுத்த கழிவு

32. கணக்கியலில் மூலஏடாகவும், பேரேடாகவும் செயற்படும் ஓர் ஏடு?

1) கொள்வனவு நாளேடு 2) விற்பனை நாளேடு 3) பொதுநாட்குறிப்பேடு 4) காசேடு

33. காசுக் கொடுப்பனவிற்கான மூல ஆவணமாக அமைவது,

1) பட்டியல் 2) கொடுப்பனவுக் கைச்சாத்து 3) பற்றுச்சீட்டு 4) வைப்புச்சீட்டு

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 34, 35ம் வினாக்களுக்கு விடை தருக.**

30.06.2021 இல் இருந்தவாறு காருண்யன் வணிகத்தின் சில்லறைக் காசாளரிடம் இருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூபா 1800 ஆகும். பின்வருவன 2021 யூலை மாதத்திற்கான சில்லறைச் செலவுகளின் மொத்தத்தொகைகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| தபால் செலவு | ரூபா 320 |
| போக்குவரத்து செலவு | ரூபா 200 |
| காகிதாதிகள் செலவு | ரூபா 150 |
| உபசரணைச் செலவு | ரூபா 180 |

01.08.2021 இலிருந்து சில்லறைக் காசேட்டு முற்பணப் பெறுமதி ரூபா 1000 ஆல் அதிகரிக்கப்படும்.

34. 2021 யூலை மாதத்திற்கான சில்லறைச் செலவுகளின் மொத்தப் பெறுமதி யாது?
1) ரூபா 1800 2) ரூபா 850 3) ரூபா 520 4) ரூபா 330

35. 01.08.2021 இல் சில்லறைக் காசாளரால் மீள்நிரப்பப்படும் தொகை யாது?
1) ரூபா 1850 2) ரூபா 850 3) ரூபா 1000 4) ரூபா 150

36. வங்கியில் பணத்தை வைப்பிலிட்டமைக்கான கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தும்மூலஆவணமாக அமைவது,
1) பற்றுச்சீட்டு (2) கைச்சாத்து (3) பட்டியல் (4) வைப்புச் சீட்டு

37. வணிகத்தினது காசுக் கிடைப்பனவுக்குரிய மூலமாக அமையாதது,
1) கடனாகப் பெற்ற காசு
2) வாடகை, வட்டி வருமானங்கள் மூலம் பெற்ற காசு
3) கடன்களை மீளச்செலுத்திய காசு
4) கடன்பட்டோரிடம் பெற்ற காசு

Education கல்வி அධ්‍යාපන

❖ கீழே வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் காட்டப்பட்டுள்ளது. அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38, 39ம் வினாக்களுக்கு விடை தருக.

A–உரிமையாளர் ஈடுபடுத்திய மூலதனம் ரூபா 100000

B–கடனுக்கு பொருள் கொள்வனவு ரூபா 10000

C–மின்கட்டணச் செலவு ரூபா 2000

D–ரூபா 2000 பெறுமதியான பொருட்கள் ரூபா 3000 க்கு விற்பனை செய்யப்பட்டது.

38. ABCD நடவடிக்கையின் பின்னர் வணிகப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றமானது,
1)ரூபா 10000 குறைவு 2) ரூபா 10000 அதிகரிப்பு
3) ரூபா 99000 குறைவு 4) ரூபா 99000 அதிகரிப்பு

39. மேலேயுள்ள கொடுக்கல் வாங்கல்களில் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக அமைவது,
1) A, D 2) B, D 3) A, C, D 4) B, C, D

40.சில்லறைக் காசேட்டின் மீள் நிரப்பலுக்கான இரட்டைப் பதிவானது முறையே,
1) காசேடு– வரவு, சில்லறை காசேடு செலவு
2) உரிய செலவுக் கணக்கு வரவு, சில்லறை காசேடு செலவு
3) சில்லறை காசேடு வரவு, காசேடு செலவு
4) சில்லறை காசேடு வரவு, உரிய செலவுக் கணக்கு செலவு (40 புள்ளிகள்)



kalvi.lk

## மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# நிலையறிபரீட்சை 2021
## தரம் 10

- ❖ முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.

01. **பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i)தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை தருக.**

கபில் என்பவர் 01.01.2021 இல் தனது சேமிப்பு வைப்பிலிருந்த ரூபா 200000 ஐப் பயன்படுத்தி தனது பிரதேச சந்தைக் கட்டடத் தொகுதியில் ஒரு பகுதியை மாதாந்தம் ரூபா 3000 வீதம் வாடகைக்குப் பெற்று உள்ளூர் உணவு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துவந்தார். இவ் வணிகத்திற்கு ''யாழ்பாடி வணிகம்'' எனப் பெயரிட்டதுடன்,மாதாந்தம் ரூபா 4000 வீதம் சம்பளத்திற்கு விற்பனைத் துறையில் பயிற்சிபெற்ற உதவியாளர் ஒருவரை நியமித்தார். கடனுக்கு ரூபா 10000 க்கு குளிர்சாதனப்பெட்டி ஒன்றைக் கொள்வனவு செய்தார். கபில் தனது மனைவியின் வைத்தியச் செலவுக்காக ரூபா 15000 இனை எடுத்துள்ளார்.

2021 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

ஜனவரி மாதத்திற்கான விற்பனை வருமானம் ரூபா 15 000

வணிகப் பயன்பாட்டிற்கான அலுமாரி கொள்வனவு ரூபா 10000

அலுமாரி கொள்வனவுக்கான போக்குவரத்துச் செலவு ரூபா 1000

மீள்விற்பனைக்கான பொருட்செலவு ரூபா 6000

மின்சாரச்செலவு ரூபா 1500

வாடகை செலுத்தியது ரூபா 3000

01. அ) ''யாழ்பாடி'' வணிகத்தால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவை யாது?

    ஆ) ''யாழ்பாடி'' வணிகத்தின் பலம் ஒன்றினைத் தருக.

02. ''யாழ்பாடி'' வணிகம் பதிவுசெய்யப்பட வேண்டுமா? ஆம் எனின் காரணம் தருக.

03. அ) இவ் வணிகத்தை நோக்கத்தின் அடிப்படையில் எவ்வகை வணிகமாகும்?

    ஆ) இவ் வணிகத்தின் அகச்சூழல் காரணி ஒன்றையும் புறச்சூழல் காரணி ஒன்றையும் தருக.

04. அ) ''யாழ்பாடி'' வணிகம் எச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டும்?

    ஆ) இவ் வணிகத்தைப் பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மை ஒன்று தருக.

05. ''யாழ்பாடி'' வணிகத்தின் ஆரம்ப மூலதனத்தினை கணக்கீட்டுச் சமன்பாட்டில் தருக.

06. உரிமையாளரான கபிலையும் யாழ்பாடி வணிகத்தையும் தனித்தனியாக வேறுபடுத்தும் கணக்கீட்டு எண்ணக்கரு யாது?

07. இவ் வணிகத்தில் பயன்படுத்தப்படும் மூலஏடுகள் இரண்டினை குறிப்பிட்டு அதற்கான மூல ஆவணங்களைத் தருக.

08. குளிர்சாதனப்பெட்டி கடனுக்கு கொள்வனவுக்கான இரட்டைப் பதிவினைத் தருக.

09. அ) இங்கு குறிப்பிடப்பட்ட நடைமுறையல்லாத அல்லாத சொத்து ஒன்று தருக.

    ஆ) இவ் வணிகத்தின் உரிமையில் குறைவை ஏற்படுத்தும் விடயம் ஒன்று தருக.

10. 31.01.2021 இல் காசுமீதியினைக் கணிப்பிடுக. (10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி I– வணிகக்கல்வி

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக)**

02. i) அ) வணிகம் என்றால் என்ன?

ஆ) பொதுவாகக் காணப்படும் வணிக நோக்கங்கள் 2 தருக.

(02 புள்ளிகள்)

ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

அ) தேவைகளானவை அத்தியாவசியமானவையாகவும் பொதுத்தன்மை கொண்டதாகவும் காணப்படும். ( )

ஆ) உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் தன்மையின் அடிப்படையில் வணிகங்களை தனியுடமை, பங்குடமை வணிகங்கள் என வகைப்படுத்தப்படும். ( )

இ) வணிகமொன்றின் மூலம் நுகர்வோரது தேவைகள், விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக நுகர்வோருக்கு வழங்கப்படும் ஒரு செயற்பாடு பொருள் வணிகமாகும். ( )

ஈ) நாடொன்றின் பொருளாதார விருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுப்பது சமூகமாகும். ( )

(02 புள்ளிகள்)

iii) நிர்மலா என்பவர் யமுனாவின் உதவியுடன் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்களை உபயோகித்து பூச்சாடிகளைத் தயாரித்து விற்பனை செய்யும் ''எவரெஸ்ட் பூஞ்சோலை'' எனும் வணிகத்தை ஆரம்பித்தார். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றமையால் இதற்கான கேள்வி அதிகரித்துக் காணப்பட்டது.

அ) இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் ''எவரெஸ்ட் பூஞ்சோலை'' வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினர்கள் 2 தருக.

ஆ) மேலே கூறப்பட்ட தரப்பினர்கள் இவ் வணிகத்தில் அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் ஒன்று வீதம் தருக.

(02 புள்ளிகள்)

iv) சுகுமார் என்பவர் தனது பிரதேசத்திலுள்ள தேக்கு மரங்களைப் பயன்படுத்தி அலுமாரிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்தி வருகின்றார்.

அ) சுகுமார் வணிகம் உற்பத்தியின் தன்மை அடிப்படையில் எத்தகைய வணிகமாகக் கருதப்படும்?

ஆ) அலுமாரி தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட மரம் எவ்வகை உற்பத்திக் காரணியாகும்?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

03. i) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

அ) வணிகத்தின் புறச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வணிக பலவீனங்களை அறியலாம். ( )

ஆ) வணிகமொன்றின் வாடிக்கையாளருக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான சிறந்த தொடர்பு ''முகாமையாளர்'' மூலமே கட்டியெழுப்பப்படுகிறது. ( )

இ) நாட்டில் அரசாங்கத்தினது நிலைத்த தன்மை மற்றும் அரசினால் பின்பற்றப்படும் வேறுபட்ட கொள்கைகள் வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். ( )

ஈ) பொருட்கள், சேவைகளது பொதுவிலை மட்டங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லல் நிறைதொழில் மட்டமாகும். ( )(02 புள்ளிகள்)

ii) ''ஸ்ரீமதி அழகுக்கலை'' எனும் வணிகத்தின் உரிமையாளரான ஸ்ரீமதி, அதிகரித்துச் செல்லும் கேள்வியை எதிர்கொள்வதற்காக தனது வணிகத்தை விரிவுபடுத்த எண்ணியபோது அமெரிக்க நாட்டு நாணயத்தின் பெறுமதி அண்மையில் அதிகரித்ததை அறிந்தார்.

அ) மேற்கூறிய சம்பவத்தின் மூலம் இனங்காணக்கூடிய வணிகச் சூழற் காரணி யாது?
(01 புள்ளிகள்)

ஆ) அமெரிக்க நாட்டு நாணய அலகின் பெயரைக் குறிப்பிடுக.
(01 புள்ளிகள்)

iii) வணிகங்களில் சட்டதிட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் 2 தருக.
(02 புள்ளிகள்)

iv) சங்கர் என்பவர் துரையப்பா விளையாட்டரங்கிற்கு அண்மையில் ''ஒலிம்பிக் வணிகம்'' எனப் பெயரிட்டு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஆடைகளை விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தார்.

அ) இவ் வணிகத்தில் அக்கறையுடைய இரு தரப்பினரைக் குறிப்பிடுக.

ஆ) மேற்குறிப்பிட்ட இரு தரப்பினரும் அக்கறை செலுத்துவதற்கான காரணம் தருக.
(02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

04. i) அ) உடைமை அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்துக.

ஆ) கீழேயுள்ள வணிக அமைப்புக்களை உடைமை அடிப்படையில் வகைப்படுத்துக.
*மத்திய அரசின் கீழுள்ள வணிகங்கள்
* கூட்டுறவுச் சங்கம் (02 புள்ளிகள்)

ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

அ) வணிகத்திற்கு தேவையான நிதியினை ஈடுபடுத்தி அதன் இடர்களைப் பொறுப்பேற்கும் நபர் ''ஊழியராவார்''. ( )

ஆ) அங்கத்தவர்களினதும் சமூகத்தினதும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் வணிகங்கள் ''இலாபநோக்கற்ற வணிகங்களாகும்''. ( )

இ) பங்குடமை வணிக அமைப்பில் பங்காளர்கள் பலர் இருப்பதனால் கூட்டாகச் சேர்ந்து



kalvi.lk

மிகச் சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வாய்ப்புக்கள் குறைவாக காணப்படும். ( )

ஈ) பங்குடமை வணிகத்தின் ஆரம்ப மூலதனம் ரூபா 1000 அல்லது அதற்கு மேற்படின் ஒப்பந்தம் எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என மோசடித் தவிர்ப்புச் கட்டளைச் சட்டம் குறிப்பிடுகின்றது. ( )

(02 புள்ளிகள்)

iii) வணிகப் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் எவ்வகை வணிக அமைப்பைச் சார்ந்தது எனக் குறிப்பிடுக.

அ) பட்டயக் கணக்காளர்கள் சிலர் கணக்காய்வு நிறுவனம் ஒன்றை அமைத்தல் -

ஆ) இலங்கை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் -

இ) இலங்கை புகையிரதத் திணைக்களம் -

ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியம் -

(02 புள்ளிகள்)

iv) பாடசாலை ஒன்றின் உயர்தர மாணவர் மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "சிற்றுண்டிச்சாலை" ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள "அற்லஸ்" கம்பனியால் விநியோகிக்கப்பட்ட பேனைகளுக்கு மிகவும் உயர்வான கேள்வி காணப்பட்டது.

மேலே தரப்பட்ட சம்பவத்திலிருந்து கீழே A, B, C, D ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் வீதம் தருக.

A - சேவை வழங்கும் வணிகம் -

B - சங்கங்கள் -

C - தனியார் உடமை வணிகம் -

D - பொதுத்துறை வணிகம் -

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**பகுதிII–கணக்கீடு**

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக**

05. i) வணிகமொன்றில் காணப்படும் சொத்துக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii) தாரா வணிகத்தில் 31.12.2020 இல் முடிவடைந்த வருடத்தில் ரூபா 300000 பெறுமதியான சொத்துக்களும் ரூபா 180000 பெறுமதியான வங்கிக்கடனொன்றும் உள்ளது எனக் கொண்டு உரிமையாண்மைத் தொகையினைக் கணிப்பிடுக.

(02 புள்ளிகள்)

iii) பின்வருவன தளபாட விற்பனை நிறுவனம் ஒன்றின் 31.03.2021 இல் முடிவடைந்த மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்களாகும்.

அ) ரூபா 200000 மூலதனமிட்டு வணிகத்தை ஆரம்பித்தல்.

ஆ) ரூபா 100000 பெறுமதியான கட்டடத்தை வணிக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தினார்.

இ) வங்கியிலிருந்து ரூபா 50000 கடன் பெறுதல்.

ஈ) மீள்விற்பனைக்காக ரூபா 30000 க்கு தளபாடம் கடனுக்கு கொள்வனவு செய்தல்.



kalvi.lk

உ) ரூபா 10000 க்கு தளபாடம் விற்பனை செய்தல்.

**வேண்டப்படுவது:**

மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை பின்வரும் மாதிரியைப் பயன்படுத்துக.

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள்(ரூ.) = | | | உரிமையாண்மை (ரூ.) + | பொறுப்புக்கள் (ரூ.) | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்பட்டோர்+ | சரக்கிருப்பு + | காசு = | உரிமையாண்மை + | வங்கிக்கடன் + | கடன்கொடுத்தோர் |
| 1 | | | +200000 | +200000 | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

(04 புள்ளிகள்)

iv) பின்வரும் கூற்றுக்களுள் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.

அ) செயற்பட்டு வரும் வணிகமொன்றிற்கு மேலதிகமாக உரிமையாளரால் ஈடுபடுத்தப்படுகின்ற வளங்கள் …………………….. எனப்படும். இது உரிமையினை அதிகரிக்கும்.

ஆ) ………………………… பெற்றுக்கொள்ளும் போது வணிகத்தின் சொத்தும் பொறுப்பும் அதிகரிக்கும்.

இ) வணிகத்தின் உரிமையாளரால் சொந்தத் தேவைக்காக வணிகத்திலிருந்து அகற்றும் நிதிசார் பெறுமதி…………………… ஆகும்.இதனால் உரிமை குறைவடையும்.

ஈ) வணிக செயற்பாட்டின் போது பல்வேறுபட்ட ……………………..களை ஏற்கவேண்டியிருக்கும். இதனால் உரிமை குறைவடையும். (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06. i) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களின் இரட்டைப் பதிவினைத் தருக.

அ) கடன்கொடுத்தோரான பரத்திற்கு ரூபா 6000 செலுத்தப்பட்டது.

ஆ) வணிகப் பயன்பாட்டிற்காக மோட்டார் வாகனமொன்று ரூபா 100000 க்கு கீரோ மோட்டார் கம்பனியிடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

இ) வணிகத்தின் மாதாந்த வாடகை ரூபா 5000 செலுத்தப்பட்டது.

ஈ) ரூபா 20000 வட்டி வருமானமாகப் பெறப்பட்டது.

(04 புள்ளிகள்)

ii) பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| கொடுக்கல் வாங்கல் | இரட்டை விளைவு விதி |
|---|---|
| 1. கடன்கொடுத்தோருக்கு காசு செலுத்துதல் | சொத்து குறைவு – வரவு<br>பொறுப்பு அதிகரிப்பு - செலவு |
| 2. தளபாடக் கொள்வனவு | ……………………………………………….<br>………………………………………………. |
| 3. வங்கிக்கடன் பெற்றது | ……………………………………………….<br>………………………………………………. |
| 4. தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது | ……………………………………………….<br>………………………………………………. |
| 5. கிடைத்த வாடகை வருமானம் | ……………………………………………….<br>………………………………………………. |

(04 புள்ளிகள்)



kalvi.lk

iii) ராம்ராஜ் வணிகத்தின் 2021 ஜனவரி மாதத்தின் முதல் இருவாரங்களிலும் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 01.01.2021 இல் | காசுமீதி | ரூபா 12500 |
| 05.01.2021 இல் | பொருட்கொள்வனவு | ரூபா 6000 |
| 07.01.2021 இல் | வங்கிக்கடன் பெற்றது | ரூபா 3000 |
| 09.01.2021 இல் | கடன் விற்பனை | ரூபா 5000 |
| 10.01.2021 இல் | சம்பளம் செலுத்தியது | ரூபா 3000 |
| 11.01.2021 இல் | மேலதிக மூலதனமிட்டது | ரூபா 10000 |
| 12.01.2021 இல் | கடன்பட்டோரிடம் பெற்ற காசு | ரூபா 2000 |
| 13.01.2021 இல் | காசு விற்பனை | ரூபா 6000 |

**வேண்டப்படுவது:**மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ராம்ராஜ் வணிகத்தின் காசேட்டில் பதிவு செய்து சமப்படுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

07.i)பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளில் பதிந்து காட்டுக.

| | | |
|---|---|---|
| 01.02.2021 | குமரனுக்கு விற்பனை | ரூ 10 000 |
| 03.02.2021 | அமலனிடம் கொள்வனவு | ரூ 12 000 |
| 05.02.2021 | காசுக்கு விற்பனை | ரூ 24 000 |
| 07.02.2021 | சம்பளக் கொடுப்பனவு | ரூ 15 000 |

(04 புள்ளிகள்)

ii) வணிகமொன்றின் மாதாந்த சில்லறைக் காசு வசக்கட்டு ரூபா 2800 ஆகும். 2021 மார்ச் மாதத்திற்கான சில்லறைச் செலவுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

01.03.2021 இல் மீதி ரூபா 1750
01.03.2021 இல் மீள்நிரம்பல் ரூபா 1050
03.03.2021 இல் உபசரணைச்செலவு ரூபா 165
05.03.2021 இல் தபால் செலவு ரூபா 140
08.03.2021 இல் போக்குவரத்து செலவு ரூபா 180
10.03.2021 இல் உபசரணைச் செலவு ரூபா 80

**வேண்டப்படுவது:**

மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை சில்லறைக் காசேட்டில் பதிவு செய்து 31.03.2021 இற்கு சில்லறைக் காசேட்டைச் சமப்படுத்தி மீள்நிரம்பலைக் காட்டுக.

(04 புள்ளிகள்)

iii. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் விமல் வணிகத்தில் 2018 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றன.

| | |
|---|---|
| 2021.04.01 | ரூ 25000 வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. |
| 2021.04.07 | கடன்பட்டோரான சரவணனிடமிருந்து கிடைக்கப் பெற்ற 345 இலக்கம் கொண்ட காசோலை ரூ 6000 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. |
| 2021.04.11 | விற்பனைக்காக கிடைக்கப்பெற்ற 400 இலக்கம் கொண்ட காசோலை ரூ 25000 பெறுமதியான காசோலை ஒன்று அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 2021.04.20 | மின்சாரக் கட்டணமாக 425 ஆம் இலக்கம் கொண்ட ரூ 6000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. |

மேற்குறிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிந்து காட்டுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page